**செ. கு. எண்:147** **நாள்: 07.10.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை - 7.10.2017

அருணாசலபிரதேசம், தவாங் மாவட்டம், யாகேஷ் செக்டாரில், நாட்டின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 725 (I) AD PL ASC ரெஜிமெண்ட் ராணுவ வீரர் திரு E.பாலாஜி த/பெ ஏழுமலை என்பவர் **6.10.2017** அன்று ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ராணுவ வீரர் திரு. பாலாஜி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த ராணுவ வீரர் திரு. பாலாஜி அவர்களின் குடும்பத்திற்கு இருபது லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**